| English | Tamil |
| --- | --- |
| **Collecting and storing customer information in COVID-19** | ***COVID-19 காலத்தில் வாடிக்கையாளர் தகவல்களை சேகரித்தல் மற்றும் பாதுகாத்தல்*** |
| As a business owner, you may need to request the personal information of customers to help ACT Health workers find people who have visited your business if someone who works for you or one of your customers tests positive for COVID-19. | *உங்களிடம் வேலை செய்யும் ஒருவர் அல்லது உங்கள் வாடிக்கையாளர்களில் ஒருவருக்கு COVID-19 தொற்று உறுதிசெய்யப்பட்டால், உங்கள் வியாபார இடத்திற்கு வந்தவர்களைத் தேடிக்கண்டுபிடிப்பதற்கு ACT Health ஊழியர்களுக்கு உதவும் நோக்கில், ஒரு வர்த்தக உரிமையாளராக, வாடிக்கையாளர்களின் விவரங்களை நீங்கள் கோரவேண்டியிருக்கலாம்.* |
| This guideline will help you manage the privacy of customers' personal information in a way that meets privacy law and good privacy practice. | *தனியுரிமைச் சட்டங்களுக்கு அமைய வாடிக்கையாளர்களின் தனிப்பட்ட தகவல்கள் தொடர்பிலான இரகசியத்தைப் பாதுகாத்தல் மற்றும் நிர்வகித்தலுக்கு இந்த வழிகாட்டுதல் உதவும்.* |
| Collecting and storing information about customers is something many businesses already do. For example, businesses store and collect information when taking bookings, fulfilling orders, taking payments and confirming appointments. | *வாடிக்கையாளர்களைப் பற்றிய தகவல்களைச் சேகரிப்பது மற்றும் சேமிப்பது என்பது பல வணிகங்கள் ஏற்கனவே செய்துவரும் ஒன்றாகும். எடுத்துக்காட்டாக: முன்பதிவுகளை எடுக்கும்போது, ஏதாவது சேவைகளை வழங்கும்போது, பணம் செலுத்தும் போது மற்றும் சந்திப்புக்களுக்கான அனுமதியை உறுதிப்படுத்தும்போது பல வணிகங்கள் தகவல்களைப் பெற்று சேகரிக்கின்றன.* |
| If you provide a health service or your business has an annual turnover of more than $3 million per year, you must comply with the Privacy Act 1988 (Cth) in the way that information is collected, used and disclosed. For more information please contact the Office of the Australian Information Commissioner: [www.OAIC.gov.au](http://www.OAIC.gov.au) | *நீங்கள் ஒரு சுகாதார சேவை வழங்குநர் என்றால், அல்லது உங்கள் வணிகத்திற்கு ஆண்டுக்கு 3 மில்லியனுக்கும் அதிகமான வருவாய் கிடைத்தால், தகவல் சேகரிக்கும், பயன்படுத்தப்படும் மற்றும் வெளிப்படுத்தப்படும் விதம் தொடர்பிலான Privacy Act 1988 (Cth)- க்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும். மேலதிக தகவல்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்: Office of the Australian Information Commissioner: [www.OAIC.gov.au](http://www.OAIC.gov.au)* |
| Even if your business is not covered by the Privacy Act, it is good privacy practice to tell people why you are asking for the information, who will have access to it, how it will be kept safe and make sure you stick to those rules. | *உங்கள் வணிகத்திற்கு Privacy Act பொருந்தாது என்றாலும், நீங்கள் ஏன் தகவல்களைக் கேட்கிறீர்கள், யார் அவற்றைப் பார்வையிடலாம், தகவல்கள் எவ்வாறு பாதுகாப்பாக வைக்கப்படும் என்பதையும் தனியுரிமை சம்பந்தப்படட விதிகளைப் பேணுவதில் நீங்கள் உறுதியாக இருப்பதையும் மக்களுக்குத் தெரியப்படுத்தலாம்.* |

| **Requirement to ask for contact information** | **தொடர்புவிவரங்களைக் கேட்க வேண்டிய கடப்பாடு** |
|---|---|
| During the declared COVID-19 emergency, the ACT Chief Health Officer has powers under the Public Health Act (1997) to make any directions necessary to assist in containing, or responding to, the spread of COVID-19 within the community. | *COVID-19* அவசரகாலத்தின் போது, சமூகத்தில் *COVID-19* பரவுவதைக் கட்டுப்படுத்த அல்லது பதிலளிக்கத் தேவையான எந்தவொரு அறிவுறுத்தல்களையும் வழங்க *ACT Chief Health Officer*-க்கு *Public Health Act (1997)*-இன் கீழ் அதிகாரங்கள் உள்ளன. |
| These directions may be updated as the situation changes. The Public Health (Emergency) Directions can be found at https://legislation.act.gov.au/ni/2020-153/. | நிலைமை மாறும்போது இந்த அறிவுறுத்தல்களும் மாற்றியமைக்கப்படலாம். *The Public Health (Emergency) Directions*- ஐ https://legislation.act.gov.au/ni/2020-153/-இல் காணலாம். |
| Under the Chief Health Officer's Public Health Directions, some businesses now need to request contact information from their customers, for use in contact tracing. | *Chief Health Officer*-இன் *Public Health Directions*-இன் கீழ், சில வணிகங்கள் இப்போது தங்கள் வாடிக்கையாளர்களின் தொடர்புவிபரங்களைக் கோரவேண்டும். (*contact tracing* காரணங்களுக்காக) |
| As of (11.59pm, 29 May 2020) businesses in the ACT that need to request the first name and contact number of every patron or attendee (including those under 18 years of age) include: | மே *29 2020 11.59 pm* முதல் *ACT*-யிலுள்ள கீழ்க்காணும் வணிகங்கள் தமது இடத்திற்கு வரும் ஒவ்வொருவரினதும்(*18* வயதுக்கு குறைந்தவர்கள் உட்பட) முதற்பெயர் மற்றும் தொடர்பு இலக்கத்தைக் கோரவேண்டும். |
| • restaurants, cafés and other hospitality venues<br>• gyms, health clubs, fitness or wellness centres<br>• yoga, barre, pilates and spin facilities<br>• boot camps and personal trainers<br>• auction houses<br>• real estate auctions, display homes and open house inspections<br>• funerals and wedding ceremonies<br>• nail salons, beauty therapy, tanning and waxing services<br>• tattoo and body modification parlours; and<br>• day spas and non-therapeutic massage services. | • உணவகங்கள், *cafés* மற்றும் பிற விருந்தோம்பல் இடங்கள்<br>• ஜிம்கள், சுகாதார கிளப்புகள், உடற்பயிற்சி அல்லது ஆரோக்கிய மையங்கள்<br>• யோகா, *barre, pilates* மற்றும் *spin* வசதிகள்<br>• *boot camps* மற்றும் தனிப்பட்ட பயிற்சியாளர்கள்<br>• ஏல வீடுகள்<br>• ரியல் எஸ்டேட் ஏலம், *display homes* மற்றும் *open house inspections*<br>• இறுதி சடங்குகள் மற்றும் திருமண விழாக்கள்<br>• *nail salons, beauty therapy, tanning* மற்றும் *waxing* சேவைகள்<br>• *tattoo* மற்றும் *body modification parlours;* மற்றும்<br>• *day spas* மற்றும் *non-therapeutic massage* சேவைகள். |
| If you receive the information, you should also record the date and time the person attended the business or undertaking. This is also needed for contact tracing. | தகவலைப் பெற்றால், அந்த நபர் வணிகத்தில் அல்லது பணியில் இருந்த தேதி மற்றும் நேரத்தையும் நீங்கள் பதிவு செய்ய வேண்டும். யார்யாருடன் தொடர்பில் இருந்தார்கள் என்பதை அறிந்துகொள்வதற்கான *contact tracing* நடவடிக்கைக்கு இது தேவைப்படுகிறது. |

| | |
|---|---|
| You are not required to verify this information or ask for identification. Patrons and attendees can decline to provide you with this information. If they do decline, you cannot refuse them service or entry on that basis. | இந்த தகவலை நீங்கள் சரிபார்க்கவோ அல்லது அடையாளத்தைப் பரிசீலிக்கவோ தேவையில்லை. இந்த தகவலை உங்களுக்கு வழங்க வாடிக்கையாளர்கள் மறுக்கலாம். அந்தக் காரணத்திற்காக சேவையையோ அல்லது நுழைவையோ நீங்கள் மறுக்க முடியாது. |
| **The purpose of collecting personal information** | **தனிப்பட்ட தகவல்களை சேகரிக்கும் நோக்கம்** |
| You need to collect this information to help authorities in tracing infections of COVID-19 if they occur. | COVID-19 நோய்த்தொற்றுகள் ஏற்பட்டால் அவற்றைக் கண்டறிவதில் அதிகாரிகளுக்கு உதவ இந்த தகவலை நீங்கள் சேகரிக்க வேண்டும். |
| In many cases businesses will already be collecting this information for bookings or memberships. It is important to let customers know that their personal information may also be used for contact tracing if requested by health authorities | பல சந்தர்ப்பங்களில் வணிகங்கள் முன்பதிவு அல்லது அங்கத்துவ நோக்கங்களுக்காக வாடிக்கையாளர்களின் தகவலை ஏற்கனவே சேகரிக்கின்றன. அவர்களின் தனிப்பட்ட தகவல்கள் contact tracing செயற்பாட்டுக்காக சுகாதார அதிகாரிகளால் பயன்படுத்தப்படலாம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்துவது முக்கியம். |
| **How to protect customer privacy** | **வாடிக்கையாளர்களின் தனியுரிமையை எவ்வாறு பாதுகாப்பது** |
| To comply with privacy laws and good privacy practice: | தனியுரிமை சட்டங்கள் மற்றும் தனியுரிமை நடைமுறைகளுக்கு இணங்க: |
| 1. You should let people know before you collect the information for contact tracing. | 1. Contact tracing நோக்கத்திற்காக தகவல்களைச் சேகரிப்பதற்கு முன்பு அதுதொடர்பில் நீங்கள் மக்களுக்குத் தெரியப்படுத்த வேண்டும். |
| You should tell the customer what information you are collecting, how you will use it and how and when you will destroy it. You can do this by putting up a notice at your business and on your website that explains the information when you talk to your customer or client. Some examples are provided later in this document. | நீங்கள் எந்த தகவலைச் சேகரிக்கிறீர்கள், அதை எவ்வாறு பயன்படுத்துவீர்கள், எப்படி, எப்போது அழிப்பீர்கள் என்பதை வாடிக்கையாளரிடம் சொல்ல வேண்டும். இதுகுறித்த அறிவிப்பை உங்களது வணிகத்திலோ அல்லது உங்கள் இணையத்தளத்திலோ வெளியிடலாம். இதற்கான சில உதாரணங்கள் இந்த ஆவணத்தின் பிற்பகுதியில் வழங்கப்பட்டுள்ளன. |
| 2. You should securely store this information once you have collected it. | 2. தகவலை நீங்கள் சேகரித்தவுடன் அதைப் பாதுகாப்பாக சேமிக்க வேண்டும். |
| You should take steps to make sure that the information is kept securely and that it is not accessed by people who aren’t authorised to have the information. | சேகரிக்கப்பட்ட தகவல் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளதா என்பதையும், அங்கீகரிக்கப்படாதநபர்களால் அதை அணுக முடியாது என்பதையும் உறுதிப்படுத்த நீங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | |
|---|---|
| 3. You should only provide this information to relevant health authorities where requested. | *3. நீங்கள் சேகரித்த தகவல்களை அங்கீகரிக்கப்பட்ட சுகாதார அதிகாரிகளிடம், அவர்கள் கோரிக்கை விடுத்தால் மாத்திரமே வழங்க வேண்டும்.* |
| Contact tracing is only done by health authorities, and you should only disclose the information to health authorities when they request it for contact tracing purposes. | *Contact tracing நடவடிக்கை சுகாதார அதிகாரிகளால் மட்டுமே செய்யப்படுகிறது. Contact tracing நோக்கங்களுக்காக சுகாதார அதிகாரிகள் அதைக் கோரும்போது மட்டுமே நீங்கள் தகவலை வழங்க வேண்டும்.* |
| 4. You should not disclose the information to anyone else. This means you should not give this information to other entities unless the customer has agreed to this sharing, or you are required to by law. | *4. சேகரிக்கப்பட்ட தகவலை நீங்கள் வேறு யாருடனும் பகிர்ந்துகொள்ளக்கூடாது. வாடிக்கையாளர் அனுமதியளிக்கும்பட்சத்திலோ அல்லது சட்டத்தின்படி நீங்கள் அந்த தகவலை வழங்கவேண்டிய நிர்ப்பந்தம் எழுந்தாலேயொழிய வேறு யாருக்கும் நீங்கள் தகவலை வழங்கக்கூடாது என்பதே இதன் பொருள்.* |
| 5. You should destroy this information after 28 days. | *5. சேகரிக்கப்பட்ட தகவலை நீங்கள் 28 நாட்களுக்குப் பிறகு அழிக்க வேண்டும்.* |
| You should destroy the information after 28 days. Delete all electronic files. If a paper copy of the information is kept it should be destroyed securely – eg. by shredding. Don't put it in a rubbish bin or recycling bin. | *28 நாட்களுக்குப் பிறகு நீங்கள் தகவலை அழிக்க வேண்டும். அனைத்து மின்னணு கோப்புகளையும் நீக்க வேண்டும். தகவலின் காகித பிரதியை வைத்திருந்தால் அது பாதுகாப்பாக அழிக்கப்பட வேண்டும் - உதாரணமாக shredding மூலம். அதை ஒரு குப்பைத் தொட்டியில் அல்லது மறுசுழற்சி தொட்டியில் போட வேண்டாம்.* |
| 6. You should still comply with any other legal record keeping obligation that you might have. | *6. தரவுகள் சேகரித்துவைக்கப்படுவது குறித்த வேறு ஏதாவது சட்ட நிபந்தனைகள் இருந்தால் அதற்கு நீங்கள் கட்டுப்பட வேண்டும்.* |
| **Where can I get more information?** | ***கூடுதல் தகவல்களை நான் எங்கே பெற முடியும்?*** |
| The Office of the Australian Information Commissioner can provide more information about privacy obligations: www.OAIC.gov.au. For the latest information about the COVID-19 emergency in the ACT, please go to https://www.covid19.act.gov.au | *தனியுரிமைச்சட்டங்கள் குறித்த கடப்பாடுகள் பற்றிய கூடுதல் தகவலை Office of the Australian Information Commissioner வழங்க முடியும்: www.OAIC.gov.au. ACT-இல் COVID-19 அவசரநிலை பற்றிய பிந்திய தகவலைப் பெற்றுக்கொள்ள: https://www.covid19.act.gov.au* |
| **Sample notices** | ***மாதிரி அறிவிப்புகள்*** |
| Below are some examples of notices you could use to inform your customer. | *உங்கள் வாடிக்கையாளருக்கு தெரிவிக்க நீங்கள் பயன்படுத்தக்கூடிய அறிவிப்புகளின் மாதிரிகள் சில கீழே.* |

| **Information requested for COVID-19 Contact tracing** | ***COVID-19 Contact tracing-க்காக கோரப்பட்ட தகவல்*** |
|---|---|
| The ACT Public Health Emergency Directions require us to request your first name and phone number to allow for contact tracing, in case a client or staff member tests positive for COVID-19. This is to protect your health and safety and others in our community. | *எமது பணியாளர் ஒருவர் அல்லது வாடிக்கையாளர்களில் ஒருவருக்கு COVID-19 தொற்று உறுதிசெய்யப்பட்டால், இந்த இடத்திற்கு வந்தவர்களைத் தேடிக்கண்டுபிடிப்பதற்கு உதவும் நோக்கில், ACT Public Health Emergency Directions -க்கமைய உங்கள் முதற் பெயர் மற்றும் தொலைபேசி எண்ணை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும். இது உங்களது உடல்நலத்தைப் பாதுகாப்பதற்கும் சமூகத்தில் உள்ள மற்றவர்களைப் பாதுகாப்பதற்குமான நடவடிக்கையாகும்.* |
| We will only disclose your information to health authorities if they request us to do so following a positive COVID-19 test. | *COVID-19 நோய்த்தொற்றொன்று உறுதிப்படுத்தப்பட்டதைத் தொடர்ந்து, சுகாதார அதிகாரிகள் உங்களது தகவல்களை எங்களிடம் கேட்டால் மட்டுமே நாங்கள் அவற்றை வெளியிடுவோம்.* |
| We will store your personal information securely and destroy it when no longer needed. | *உங்கள் தனிப்பட்ட தகவல்களை நாங்கள் பாதுகாப்பாக சேமித்து வைப்போம், அது தேவைப்படாதபோது அழித்துவிடுவோம்.* |
| **Or (where this information is already being collected for other purposes)** | *அல்லது (இந்த தகவல்கள் ஏற்கனவே பிற நோக்கங்களுக்காக சேகரிக்கப்பட்டிருந்தால்)* |
| The ACT Public Health Emergency Directions require us to request your first name and phone number to allow for contact tracing, in case a client or staff member tests positive for COVID-19. This is to protect your health and safety and others in our community. | *எமது பணியாளர் ஒருவர் அல்லது வாடிக்கையாளர்களில் ஒருவருக்கு COVID-19 தொற்று உறுதிசெய்யப்பட்டால், இந்த இடத்திற்கு வந்தவர்களைத் தேடிக்கண்டுபிடிப்பதற்கு உதவும் நோக்கில், ACT Public Health Emergency Directions -க்கமைய உங்கள் முதல் பெயர் மற்றும் தொலைபேசி எண்ணை நாம் பெற்றுக்கொள்ள வேண்டும்.<br>இது உங்களது உடல்நலத்தைப் பாதுகாப்பதற்கும் சமூகத்தில் உள்ள மற்றவர்களைப் பாதுகாப்பதற்குமான நடவடிக்கையாகும்.* |
| Please be aware that this personal information you provide to us for booking or other purposes may be used for contact tracing if required by health authorities. | *முன்பதிவு அல்லது பிற நோக்கங்களுக்காக நீங்கள் எங்களுக்கு வழங்கிய இந்த தனிப்பட்ட தகவல், தேவையேற்படின், சுகாதார அதிகாரிகளால் contact tracing நோக்கத்திற்காக பயன்படுத்தப்படலாம் என்பதை நினைவில் கொள்க.* |
| We will not disclose this information to anyone other than health authorities if they request this information, or unless you have otherwise agreed. The information will be stored securely and disposed of securely when no longer required. | *இந்த தகவலை சுகாதார அதிகாரிகள் கோரினால் அவர்களுக்கும், நீங்கள் அனுமதியளிக்கும் தரப்பினருக்கும் தவிர, வேறு எவருக்கும் வெளியிட மாட்டோம். உங்களது தகவல் பாதுகாப்பாக சேமிக்கப்படுவதுடன், தேவைப்படாதபோது பாதுகாப்பாக அழிக்கப்படும்.* |